குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.364/2025**

வழக்கு சாட்சி ம.சா.1

2026ம் ஏப்ரல் மாதம் 17–ம் நாள் எதிர் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய 1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அரவிந்த் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

நாள்: 18.04.2026

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். என்ன தொழில் செய்கிறேன் என்றால் மாயா கலர்ஸ் என்ன பெயரில் டையிங் தொழில் செய்து வருகிறேன். எத்தனை வருடமாக செய்து வருகிறேன் என்றால் 15 வருடமாக தொழில் செய்து வருகிறேன். எதிரி எனக்கு யார் மூலமாக அறிமுகம் என்றால் என்னுடைய பழைய பார்ட்னர் ஹரிபாஸ்கர் என்பவர் மூலம் தான் பழக்கம். ஹரிபாஸ்கர் மூலமாக பழக்கம் என்பதை புகாரிலும் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முறையாக வருமான வரி கணக்கு செலுத்துகிறேன் என்றால் சரிதான். எனக்கு ரூ.14,00,000/– கடன் கொடுக்கும் அளவிற்கு தகுதி உள்ளது என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வங்கி பரிவர்த்தனை கணக்கு தாக்கல் செய்துள்ளேன். வருமான வரி கணக்கு ஆவணங்களை கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். என்னுடைய நிரந்தர முகவரி மதுரை மேலூர் விலாசம், வெல்லலூர் அஞ்சல். தற்போதைய முகவரி சிவா ரைஸ் மில் அருகில் கலியனூர் அஞ்சல். கதவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. பார்த்து தான் சொல்லமுடியும். 6 மாதம் முன்பாக தான் மேற்கண்ட முகவரிக்கு குடிபெயர்ந்தேன். காசோலை வழக்கு தாக்கல் செய்த போது என் முகவரி துளுக்கன்காடு, கலியனூர் அஞ்சல். எதிரி மேற்கண்ட முகவரியில் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றும், அந்த அறிவிப்பானது அந்த முகவரியில் அப்படிப்பட்ட நபர் இல்லை என்று திருப்பப்பட்டது என்றால் வழக்கறிஞர் மூலமாக தெரிந்துகொண்டேன். **பதில் அறிவிப்பு திருப்பப்பட்ட பதிலுரை எ.மா.சா.1** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. எனக்கும் எதிரிக்கும் எத்தனை ஆண்டு காலமாக வரவு செலவு இருந்தது என்றால் 2022 ல் இந்த காசோலை வழக்கு சம்மந்தமாக நடந்த ஒரே பரிவர்த்தனை தான். பொதுவாக வியாபாரம் காசோலையை பாதுகாப்பிற்காக வாங்குவோம் என்றால் இல்லை.தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பிரமாண வாக்குமூலத்தில் 17 லட்சம் எதிரி கொடுக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வட்டியுடன் சேர்ந்து கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லியுள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பில் 17 லட்சம் என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் எதிரிக்கு என்ன தேதிகளில் பணம் கொடுத்தேன் என்றால் என்னுடைய வங்கி கணக்கான IDBI Bank Savings Account ல் இருந்து 05.12.2022 ல் எதிரியின் நண்பர் சண்முகராஜ் என்பவரின் Karur Vysya Bank வங்கி கணக்கிற்கு ரூ.5,00,000/– எதிரி சொல்லி அனுப்பிவைத்தேன். 13.12.2022 ல் என்னுடைய வங்கி கணக்கான IDBI Bank Pallipalayam branch Savings Account ல் இருந்து ரூ.1,00,000/– எதிரியின் Axis Bank வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்துள்ளேன். 13.12.2022 ல் என்னுடைய நிறுவனமான மாயா கலர்ஸ் வங்கி கணக்கான IDBI Bank Pallipalayam branch Current Account ல் இருந்து ரூ.7,00,000/– எதிரியின் Axis Bank வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்துள்ளேன். 13.12.2022 ல் என்னுடைய ICICI Bank Vellaloor branch Savings Account ல் இருந்து ல் இருந்து ரூ.99,000/– எதிரியின் Axis Bank வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்துள்ளேன். சண்முகராஜ் கணக்கிற்கு பணம் அனுப்பப்பட்ட தேதியும் எதிரி கணக்கிற்கு பணம் அனுப்பிய தேதியும் வெவ்வேறு என்றால் சரிதான். சண்முகராஜ் சித்தோடை சேர்ந்தவர் என்றால் சரிதான். சண்முகராஜ் நான் நேரில் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்னை அவரை பார்ப்பதற்கு அழைத்துச் சென்றுள்ளார். எதிரி எதற்காக அழைத்துச் சென்றுள்ளார் என்றால் சண்முகராஜ் நடத்தி வந்த கம்பெனியை எதிரி வாடகை எடுத்து நடத்தாலும் என்ற எண்ணத்தோடு இருந்தார்.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**